வினாத்தாள்கள் அனுப்பப்பட்டால் அது ஒரு முன்மாதிரியாக அமைந்து, ஏனைய மற்ற மாநில மொழிகளிலும் அனுப்பப்பட வேண்டுமென்பதற்காகவும், போதுமான மொழிபெயர்ப்பாளர்கள் பற்றாக்குறையாலும், வினாத்தாள்களுடைய இரகசியத்தைப் பாதுகாக்கும் பொருட்டும் தமிழில் வழங்க இயலாது என்று தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே, இத்தகைய அடிப்படையின் கீழேதான் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்களுக்கு வினாத் தாள்களை வினியோகிக்கின்றபொழுது தேர்வு நடக்கின்ற இடங் களிலேயே மொழி பெயர்க்க வேண்டுமென்ற ஆணையை அரசு பிறப்பித்திருக்கிறது.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தினுடைய எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற அந்தக் கொள்கை என்னவாயிற்று ஆகவே, மீண்டும் பரிசீலனை செய்து, அவர்களை உற்சாகப் படுத்துகின்ற வகையில், டெக்னிக்கல் வார்த்தைகளைப் புரிந்து கொள்ள, ஆட்சிச் சொல் அகராதி அளிக்கப்பட்டிருப்பதைப்போல் அந்த மாணவர்களுக்கு டெக்னிக்கல் சொல்லகராதியைக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்கின்ற கருத்தின் அடிப் படையிலே, வருங்காலங்களில், இதை நடைமுறைப்படுத்த, மீண்டும் அரசு புது டெல்லியில் இருக்கக்கூடிய தலைமை இயக்குநரோடு கலந்து பேசும்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, சிவில் கோர்ட்டிலே மாத்திரம் அல்ல, மற்ற எல்லா கோர்ட்டுகளிலும் தமிழில் தீர்ப்பு எழுத வேண்டுமென்ற நிலையை அரசு எடுத்திருக்கும்போது, இதற்கு மாத்திரம் கால தாமதம் செய்வது சரியாக இருக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புவதோடு, எவ்வளவு சீக்கிரமாக, சர்க்கார் இதை அமுல்படுத்த முன்வரும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் நடவடிக்கை எடுக்கும்.

பள்ளாபாளையம் கிராம அரிசனக் குடியிருப்புகளுக்கு ஏற்பட்ட தீ விபத்து.

* வினா எண். 220—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம் பள்ளாபாளையம் கிராம அரிசன மக்களின் வீடுகள் தீப்பிடித்து எரிந்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அரசு அவர்களுக்கு வீடு கட்டித்தரும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் மூலம் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியருக்கு பணிக்கப்பட்டுள்ளது.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளாபாளையம் கிராமத்தில் தீ பிடித்து ஓராண்டு காலமாகிறது. இப்பொழுதே, கிராமப்புற வீடு கட்டும் சங்கங்களில் ஏராளமான மனுக்கள் தேங்கியிருக்கின்றன. ஆகவே, அதை மாற்றி, தாட்கோ மூலம் அரசு வீடு கட்ட ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அத்தகைய எண்ணம் அரசுக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிட்ப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

காவிரி நீர்ப் பிரச்சினை.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, காவிரி நீர்ப் பிரச்னையில் கர்நாடக மாநில முதல்வர் குண்டுராவ் குறிப்பிட்டது குறித்து. . . .

மாண்புமிகு பேரவைத்தலைவர் : அதைப் பற்றி நாளை மறுநாள் எடுத்துக் கொள்ளலாம்.

3. அறிவிப்பு

நிதி நிலை அறிக்கை அளிக்கப் பெறும் தேதி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 202 (1) மற்றும் தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 196 (1) ஆகியவற்றின் கீழ் 1982–83-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை 26–2-1982 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்குச் சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க வேண்டுமென ஆளுநர் அவர்கள் குறித்துள்ளாரர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.